## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# அலங்காநல்லூரில் மாபெரும் ஜல்லிக்கட்டுப் போட்டி!

### மக்கள் வெள்ளத்தில் நிரம்பி வழிந்த கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம்!








கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டம், மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டுப் போட்டியினை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உறுதிமொழி ஏற்றபின் கொடியசைத்து துவக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு தங்கக் காசுகள், சைக்கிள், மிக்ஸி உள்ளிட்ட பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று போட்டியினை உற்சாகத்துடன் கண்டு ரசித்தனர்.

## குடிமனைப் பட்டா பிரச்சினைக்குத் தீர்வு!

# தமிழ்நாடு அரசின் முடிவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வரவேற்பு!

### மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் அறிக்கை!

**சென்னை, பிப். 12 - குடிமனைப் பட்டா பிரச்சினைக்குத் தீர்வு கண்ட தமிழ்நாடு அரசின் முடிவுக்கு மாநிலச் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது.**


இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



சென்னையை சுற்றியுள்ள நான்கு மாவட்டங்களில் 32 கிலோ மீட்டருக்குள் உள்ள பகுதிகளில் 29,187 குடும்பங்களுக்கும், அதே போல் சென்னை மாநகராட்சி தவிர்த்து மற்ற மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு இடங்களில் வசிக்கும் 57,000 குடும்பங்களுக்கும் பட்டா வழங்கவும் ஒட்டுமொத்தமாக 86,000 குடியிருப்பு களுக்கு பட்டா வழங்கிட தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

அரசு புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, பெல்ட் ஏரியா, நீர் நிலைப் பகுதிகளில் ஏழை, எளிய அடித்தட்டு மக்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் இடத்திற்கு பட்டா வழங்கிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து ஆர்ப்பாட்டம், மறியல், காத்திருப்பு போராட்டம் என பல்வேறு இயக்கங்களை மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறது. இந்த இயக்கங்களில் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். இந்நிலையில், நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள இம்முடிவை சி.பி.ஐ. (எம்) வரவேற்கிறது. அதேநேரத்தில், ஏற்கனவே நீர் நிலை மற்றும் ஆட்சே பனைக் குரிய புறம்போக்கில் பல ஆண்டுகளாக சாதாரண மக்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் வசித்து வருகிற ஆட்சேபனைக் குரிய புறம்போக்கு என்கிற பகுதி குடியிருப்பு பகுதிகளாக மாறி இனி வேறு வகையில் பயன்படுத்த முடியாததாகவும், பல லட்சக்கணக்கான மக்களின் குடியிருப்பு உரிமை சம்பந்தப்பட்ட ஒன்றாகவும் இருக்கிறது. எனவே, அப்படிப் பட்ட பகுதிகளில் வசிக்கக் கூடிய மக்களுக்கும், அரசு ஆவணங்களில் உரிய மாற்றம் செய்து பட்டா வழங்கிட வேண்டுமென தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தி.மு.க. தலைமை நிலையச் செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் நேற்று முன்தினம் (10.02.24) மதுரையில் நடைபெற்ற மதுரை வடக்கு மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம் – கலாவதி ஆகியோரின் மகன் எம்.ஆர்.எம். பி.சரவணன் – ஆர்.சுரபி திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இதில் இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், அரசு இசைப்பள்ளி கலையியல் அறிவுரைஞர் ஜாகிர் உசேன், பழங்காநத்தம் பகுதிச் செயலாளரும், கவுன்சிலருமான சுதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.